# உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்கள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** கேள்வி, இயேசு உயிரோடு எழுந்தாரா?

அது உண்மையா கட்டுகதையா?

அது அர்த்தமுள்ளதா?

அதற்கு ஆதாரம் என்ன?

கிறிஸ்தவரல்லாத நண்பர் ஒருவர் உங்களிடம் இப்படி கேட்டால் என்ன சொல்விர்கள்,

இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு கட்டுக்கதையா?

அவர் மரித்தார் என்பது சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட போது நமக்கு எப்படி தெரியும்? அவரது மரணம் அடக்கத்திற்கு பிறகு, இயேசு உயிரோடு எழுந்தார் என்பது 500 க்கும் மேற்பட்ட மக்களுக்கு அது கற்பனையாக இருந்ததா அல்லது இயேசு சரீரப்பிரகாரமாக உயிர்த்ததை அவர்கள் ஏற்றனரா?

இன்று எனது விருந்தினர் இதற்கான பதில் தருகிறார் முன்னாள் நாத்திகர், கிறிஸ்தவராக மாறியவர், ஆச. லீ ஸ்ட்ராபெல், முன்னாள் பதக்கம் வென்ற சிக்காகோ டிரிபூனின் பதிப்பாசிரியர், அதோடு நியூயார்க் டைம்சின் சிறந்த விற்பனையான 20 புத்தகங்களின் ஆசிரியர். இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்த இந்த விசேஷித்த பதிப்பை பார்ப்பதற்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் ஆன்கர்ப்கின் நிகழ்ச

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம், இன்றைக்கு விசேஷித்த நாள், என்னுடைய விருந்தினர் லீ ஸ்ட்ராபெல், அவர் ஏல் யுனிவர்சிட்டியின் பட்டதாரி, சட்டம் படித்தவர், சுமார் 13 ஆண்டுகளாக, இவர்தான் சிக்காகோ டிரிபூனின் பதக்கம் பெற்ற சட்ட பதிப்பாசிரியராக இருக்கிறார், அந்த நாட்களில் இவர் நாத்திகனாக இருந்தார், மேலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒரு கட்டத்தில் கிறிஸ்துவை பற்றிய ஆராய்ச்சிக்கு நேராக இவரை நடத்தி சென்றது, அது உண்மை என நிருபிக்கும் ஆராய்ச்சியல்ல, அதற்கு மாறானது, ஆனால் ஆராய்ச்சிகளின் ஆதாரம் இவரை கிறிஸ்துவின் பக்கமாக திரும்பச் செய்தது, அந்த சம்பவத்தை இன்றைக்கு கேட்க போகிறோம், அவர் கிறிஸ்துவைப் பற்றி கண்டறிந்தவற்றை தனது புத்தகத்தில் எழுதியுள்ளார், ‘‘கிறிஸ்துவை பற்றிய உண்மை’’ இந்த புத்தகம் உலகமெங்கிலும் 2 மில்லியன் பதிப்பிற்கு மேலாக விற்பனையானது.

மேலும் சில பத்தகங்களும் இருக்கிறது, ‘‘விசவாசத்தை பற்றிய உண்மை’’ சிருஷ்டிகரைப் பற்றிய உண்மை’’

அவர் சமீபத்தில் எழுதிய புத்தகம், ‘‘மெய்மையான இயேசுவைப்பற்றிய உண்மை’’.

இப்ப, எல்லா னங்கள் இவருடைய புத்தகங்களை வாசிக்கிறன்றனர். ஆமா, உண்மையில், நானே பார்த்தேன், சில நாட்களுக்கு முன்பு மக்கள் பத்திரிக்கையில் மேத்யு மேக்மேக்கேன்கீ, டிரெட்மில்லில் நடைபயிற்சி செய்யும் படம் அவருடைய கையில் உங்கள் புத்தகம் இருந்தது ‘‘விசுவாசத்தை பற்றிய உண்மை’’ அதில் அப்படி என்ன இருக்கிறது?

**லீ ஸ்ட்ராபெல்** மற்றவர்களைப் போல எனக்கு அதைப் பார்த்து அதிர்ச்சியாயிருந்தது, ஜான். உண்மைதான், அவர் மக்கள் பத்திரிக்கையில் வந்திருந்தார், உடற்பயிற்சி செய்துகொண்டு இந்த

புத்தகத்தை வாசித்துகொண்டிருந்தார். மேலும் அந்த அட்டையில் இருந்தது ‘‘கிறிஸ்துவைப் பற்றிய உண்மை’’. நான் நினைத்தேன், இப்படிபட்ட காரியங்கள்ல அவர் ஆர்வம் காட்டுவது வியப்பாக இருந்தது. அவருடைய ஆவிக்குரிய நிலையை பற்றி எனக்கு தெரியாது, ஆனா இந்த புத்தகம் இயேசுவைப் பற்றிய சரித்திர ஆதாரங்களை புரிந்துகொள்ள உதவும் என நம்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** இவை இன்சைட் எடிஷனிலும் இடம் பெற வாய்ப்புள்ளதா?

**லீ ஸ்ட்ராபெல்** ரைட், பிரபலங்கள் வாசிக்கும் பத்திரிக்கைகளிலும் கட்டுரையாக கொடுக்க போகிறார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** அவங்ககிட்ட உங்க புத்தகம், சரி சொல்லுங்க, நீங்க இன்னொரு சம்பவத்தை சொல்லீட்டு இருந்தீங்க. சமீபத்தில உங்களுக்கு ஒரு போன் கால் வந்ததே, அதை கேட்க மக்களும் ஆர்வமாயிருக்காங்க. அவங்களுக்கு சொல்லுங்க.

**லீ ஸ்ட்ராபெல்** யா, எனக்கு ஒரு அழைப்பு வந்தது அதில், ‘‘ஸ்ட்ராபெலா!’’ நான்தா, பேசறே, அதற்கு அவங்க, ஈவல். ஏப்படி இருக்கீங்க?’’ ஈவல், அது ஈவல் கினிவல். டேர்டெவில் மோட்டார் சைகிள் சாகச வீரரை நினைவிருக்கா? அவர் சொன்னார் மார்ச்சல பீச்ல நடந்துபோயிட்டிருந்தப்ப தேவன் அவரோடு பேசியிருக்கார், சத்தமா இல்ல, அவருடைய ஆவியில் பேசினார். தேவன் அவரிடம், ‘‘ஈவல் பல முறை உன்னை காப்பாற்றி இருக்கிறேன், அந்த உணர்வே இல்லாமல் இருக்கிறாய், ஆனால் இப்போது என் குமாரனாகிய இயேசுவிடம் வரவேண்டும் என்றாராம்’’ அப்ப யோசித்திருக்கிறார், ‘‘அதனுடைய அர்த்தம் என்ன? பொதுவா தேவனை பற்றிய நம்பிக்கை எனக்கு உண்டு, ஓரளவிருக்கு, ஆனா இயேசுவை, பற்றி ஒன்றும் தெரியாது.’’ அதனால ஃபிராங் கைபரை அழைத்தார், விளையாட்டு வீரர், அவருடைய நெருங்கிய நண்பர், அவரிடம், ஃபிராங், இயேசுவைப் பற்றிய விஷயம் தெரியுமா?, உடனே அவர் என்னுடைய புத்தகத்தை அனுப்பினார், ‘‘கிறிஸ்துவைப் பற்றிய உண்மை’’ அதற்கு பிறகு, இந்த ஈவல் கினீவல் முழுவதும் மறுபிறப்பு அடைந்தார். கிறிஸ்துவுக்குள் புது விசுவாசியானார். அதிலிருந்து நானும் அவரும் நண்பர்களானோம். போனில் பேசிக்கொள்வோம், அவர் என்னை அழைக்கும் போதெல்லாம் அவர், ஸ்ட்ராபெல், ஈவல், எப்படி இருக்க என்பார், அவரிடம், ‘‘ஈவல், இப்ப உன்னோட பேரை நீ மாற்றவேண்டும், நீ ஒரு கிறிஸ்தவன், இனி உன்னை ஈவல் என்ற சொல்லாதே, ஈவல் கினீவலா இருந்த நீ இப்ப பிசாசை எதிர்ப்பவனாகு என்பேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நம்முடைய ஜனங்களுக்கு அவர் ஞானஸ்நானம் எடுத்து சாட்சி சொன்னபோது சபையில் நடந்ததை சொல்லுங்கள்

**லீ ஸ்ட்ராபெல்** அவர் ஒரு பெரிய சபையிலிருந்தார். அவருடைய சாட்சியை சொன்னார். அந்த போதகர் தனது பிரசங்கத்தை ஒதுக்கிவிட்டார் ஏன்னா அவரோட சாட்சி அவ்வளவு வல்லமையாக இருந்தது, அந்த இடத்தில் வ, தேவனுடைய அன்பிற்கும் கிருபைக்கும் பிரதிபலன் இருந்தது. அவர் சொன்னார், தான் கேடான அசுத்தமான வாழ்க்கை வாழ்ந்ததையும் தேவன், தமது கிருபையால் தன்னை மன்னித்து புதிய வாழ்க்கை கொடுத்தார்.’’ இப்போது எனது விசுவாசத்தில் உறதியாக இருக்கிறேன் என்றதும் அந்த போதகர் தனது பிரசங்கத்தை ஒதுக்கி விட்டு சொன்னார், ‘‘இதுதான் இன்றைய செய்தி. இன்றைக்கு, இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமானவர்கள் வாருங்கள் என்றார்.’’ 2 ஆராதனைகளிலும் சேர்த்து, சுமார் 700 பேர் இந்த ஈவல் கினீவலுடைய சாட்சியகேட்டு இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தனர். ஆனாலும் இதை பார்த்து வியந்தவராக தாழ்மையோடிருந்தார். மேலும் அவர், ‘‘அதாவது, என்னுடைய வாழ்க்கையை பல வழிகளில் நான் விணாக்கிவிட்டேன், ஆனாலும் இப்போதாவது இயேசுவை கண்டுகொண்டேன் என்ற சந்தோஷம் எனக்கு இருக்கிறது, அவர் என்னை எந்த வகையிலாவது பயன்படுத்தினால் அதுவே எனக்கு கிடைத்த பாக்கியம் என்றார்.’’

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** தன்னோடு ஃப்ளாரிடாவில் மோட்டார் சைகிள் பயணம் செய்ய உங்களை அழைத்ததாக கேள்விபட்டேன்.

**லீ ஸ்ட்ராபெல்** ஆமா. அவர் நீங்க, ஃப்ளாரிடாவுக்கு வாங்க. என்னோடு பைக்ல கூட்டீட்டு போறேன் என்றார்.'' அது நல்ல யோசனைதான், ஏன்னா, பிஃளாரிடா போகாம தப்பிக்க நல்ல வழிதானே.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** இதுவரைக்கு நீங்க அங்க போனதில்லை? ஆல்ரைட், உங்க கதைய கேட்க நினைக்கிறேன் ஜனங்களும் அதை அறிந்து கொள்ள வேண்டும், ஏன்னா உங்களுக்கு உண்மை தெரியும். நீங்க ரொம்ப கடினமானவராக இருந்தீங்க, நீங்க தேவனை நம்பி விசுவாசித்த காரியங்கள் உண்மை. எங்களை யேல் மற்றும் சிக்காகோ டிரிபூனிற்கு அழைத்து செல்வதோடு நாத்திகனாக உங்களோட மனநிலையை சொல்லுங்க.

**லீ ஸ்ட்ராபெல்** சரி, அதாவது, முதல்ல என்னை நான் ஒரு நாத்திகனாக எண்ணினேன் அப்ப எனக்கு 16 வயசிருக்கும். பள்ளி நாட்களில் பரிணாமத்தை பற்றிய வகுப்பில் எனக்கு கற்றுக்கொடுத்த விஷயத்தால் அதிக தாக்கம் இருந்தது, வாழ்க்கையின் ஆரம்பம். வாழ்க்கையின் துவக்கம் தானாக உருவானது என்றனா், அதற்கு எந்தவித இயற்கைக்கு அப்பாா்பட்ட தெய்வமும் தேவையில்லை. அதை நான் நம்பி, என்னை ஒரு நாத்திகனாக கருதினேன். அதன் பிறகு ஒரு நபரிடம் படிக்க சென்றேன், அவர் மதக்கோட்பாட்டை நம்பாதவர், அவர் எனக்கு புதிய ஏற்பாட்டின் காரியத்தை கற்றுத்தந்தார், உண்மையில், அவர், வேதம் சொல்பவற்றை நான் நம்ப முடியாது என்பதை நம்பும்ப டிசெய்தார். அதனால என்னை ஒரு நாத்திகனாக நினைத்தேன். கூாலிபபெண்ணை திருமணம் செய்தேன், மேல்நிலை பள்ளிலேயே தெரியும், எனக்கு 20வயசு, அவளுக்கு 19. அவ யதார்த்தமானவள், ஆவிக்குரியவற்றில் நடுநிலையானவள். நா எதிர்ப்பவனாயிருந்தேன். அதாவது, உண்மையில், ஜான், எந்த விதத்திலும் இந்த ஆதாரங்களை நோ்த்தியா ஆய்வு செய்ய நேரத்தை எடுத்துக்கல.

என்னோட யோசனை, என்னோட கருத்து என்னன்னா இந்த எல்லா வல்லமையுடைய, அன்பான, சா்வத்தை அறிந்த சிருஷ்டிகா் என்பது அா்த்தமில்லாத ஒன்றுபோல இருந்தது.

அதை ஆராய நேரத்தை ஒதுக்ககூட நா தயராயில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நீங்க அப்ப, "தேவன் ஜனத்தை உருவாக்கவில்லை, ஆனா இவா்கள் தங்கள் பயத்தை அகற்ற தேவனை படைத்ததாக நினைத்தேன்னு சொன்னீங்க.''

**லீ ஸ்ட்ராபெல்** நிச்சயமா. ஜனங்களுக்கு உதாரகுணமுள்ள ஒரு தாத்தா வானத்துல இருக்கவேண்டும் என்ற எண்ணமிருக்கு, அப்படியிருந்தா, ஒருவேளை மரித்தபிறகு, அவங்க சொர்க்கத்திற்கு போகலாம் என்ற நம்பிக்கை அவங்களுக்கு இருக்கு. இதைதான் அவங்க நினைக்கிறாங்ன்னு எனக்கு தோனுது. இதுல வருத்தமான விஷயம் என்னன்னா, ஜான், அதாவது, பெர்டிரேன்ட் ரஸ்சல் பிரபலமான நாத்திகா் சொன்னார், "தேவன் இல்லைன்னா, சரி தவறு என்று இருக்காதே.'' ஆன்ட், இப்படிதான, என்னோட வாழ்க்கைய வாழ்ந்திட்டிருந்தேன். ஏன்னோட வாழ்க்கையின் நெறி முறைகளை நானே நிா்ணயித்தேன். நாளுக்கு நாள் மாற்றிக்கொண்டேன்.

ஏன்னா என்னுடைய முதலாவது குறிக்கோள் என்ன நடந்தாலும் நா எப்பவும் சந்தோஷமா இருக்கனும். அதாவது, சந்தோஷம் தா எனக்கு முக்கியமானது. என்னோட எண்ணமெல்லாம், அதுதான, சுயநலமான வாழ்க்கையா இருந்தது. உண்மையான நிலை எப்படியிருந்ததுன்னா, அதைப் பற்றி பேசறதுல எனக்கு பிடிக்கல, ஏன்னா கேடான வாழ்க்க வாழ்ந்தேன், குடிகாரன் அவமரியாதை செய்யும் அளவு சுயத்தை கெடுத்து பல வழிகளில் என்னையே அழித்துக்கொள்ளும்படியான வாழ்க்கை இருந்தது.

கோபப்படுவதில் பிரச்சனை இருந்தது ஏன்னா நான் எந்த பாதைய எடுத்தாலும் எந்த வழிய தேற்ந்தெடுத்தாலும் வாழ்க்கையில நான் நினைத்த சந்தோஷம் எங்கையுமே எனக்கு கிடைக்கல. எனக்கு நினைவிருக்கு ஒரு நாள், ஏ மனைவி, சபைக்கு போக ஆரம்பித்தாள், ஏன்னா அவ ஒரு கிறிஸ்தவர சந்திச்சா, இந்த விஷயம் எனக்கு எரிச்சல உண்டாக்கினது. அன்றைக்கு சபைக்கு போவதாக சொன்னா, அதனால ரொம்ப ஆக்ரோஷமடைந்தேன், நான், கோபத்தோட எங்க முன்அறையின் சுவற்றில உதைத்தேன். கோபத்தின் வெளிபாடு. என்னோட மனைவி அழுதா எங்க சின்ன பொண்ணும் அழுதா. நா, அதாவது, நீங்க ஒருவேளை எங்கிட்ட கேட்கலாம், "எதனால அப்படியிருந்தீங்க? ஏ உங்களுக்கு அவ்வளவு கோபம்?''

எனக்கு தெரியல தெரிஞ்சா நிச்சயம் அத சொல்லிடுவேன். ஆனா ஒன்னு தெரியும் எனக்கு சந்தோஷத்தை நிம்மதிய கொடுப்பது எது என்று என்னால கண்டுபிடிக்க முடியாத அந்த இயலாமை என் மனதை பாதித்ததால அப்படி நடந்ததென நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, அலிசன்ன பற்றி சொன்னீங்க, உங்க மகள், நீங்க வீட்டிற்கு வர்றத பார்த்ததும், அவ என்ன செய்வா?

**லீ ஸ்ட்ராபெல்** யா, என்னுடைய வாழ்க்கய பற்றி நான் சொல்ல நினைக்கும் கேவலமான காரியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** அவளுக்கு அப்ப 5 வயசு

**லீ ஸ்ட்ராபெல்** ஆமா. 5 வயது ஆச்சு. அவ முன்னால ரூம்ல அவளோடு பொம்மைகள வைத்து விளையாடீட்டு தா இருப்பா ஆனா முன் கதவுல என்னோட சத்தம் கேட்டதும், அவளுடைய செய்கை எப்படியிருக்குன்னா தன்னோடு பொம்மைகள எல்லாத்தையும் எடுத்துட்டு அவ ரூம்கு போய் கதவ சாத்தீடுவா. அவ எண்ணம், ‘‘மறுபடியும் குடிச்சுட்டு வந்திருப்பாரோ? மறுபடியும் சுவற்றில ஓட்ட விலறமாதிரி அடிப்பாரோ? அவர் கத்தீட்டும் கூச்சல் போட்டுட்டும் தகராறு பண்ணீட்டு இருப்பாரே? எனக்கு இப்ப, அமைதியா இருக்கணும், எந்த சத்தமும் வேண்டாம் என்று நினைப்பாள்.’’ அது எனக்கு, ரொம்ப கஷ்டமா இருந்துச்சு ஏன்னா எம்பிள்ளைங்களை நா நேசிக்கிறேன். நா எப்படியிருந்தேன்றதுக்கு அதுதான் சாட்சி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** அதற்கு பிறகு உங்க மனைவிக்கு என்ன நடந்தது.

**லீ ஸ்ட்ராபெல்** யா, ஒரு தோழிய சந்தித்தாள், இயேசுவைப் பற்றி பகிர்ந்து கொண்டாள், என் மனைவி அதை பற்றி அறிந்துகொண்டு ஒரு நாள் என்னிடம் வந்தாள், 9 மாதத்திற்கு பிறகு, லீ ஒரு தீர்மானம் செய்திருக்கேள், நான் இயேசுவை பின்பற்ற தீர்மானித்திக்கிறேன் என்றாள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நீங்க என்ன நினைத்தீங்க?

**லீ ஸ்ட்ராபெல்** என்னோட எண்ணம், விவாகரத்துதா ஏ மனசுல உதித்த முதல் எண்ணம். அவ்வளவுதான், எனக்கு அதுல விருப்பமில்லை, இப்ப இவ திசை மாறி போகிறாள், பரிசுத்தவாட்டிய போல, இதுவரை இல்லாத பரிசுத்தமா எல்லா நேரத்தையும் சருக்கி விழுவதிலும், ஏழைகளை கவனிப்பதிலும், செலவிடப்போறா அதனால திருமண பந்தத்தை முடித்திட நினைத்தேன், ஆனா என்னுடைய வாழ்க்கையில் பெரிய ஆச்சரியம் என்னன்னா, அதாவது, ஒரு சில மாசத்துல, இப்படிபட்ட எதிர்மறையான காரியங்கள் நடக்குன்னு எதிர்பார்த்தேன், ஆனா நேர்மறையான மாற்றத்தை பார்க்க ஆரம்பித்தேன், அவருடைய சுபாவத்திலும் குணத்திலும், என்னோடும் பிள்ளைகளோடும் நடந்துகொள்ளும் விதம், அது மிகவும் கவர்ந்திலுப்பதா இருந்தது, ஒரு நாள் அவ என்கிட்ட, நீங்களும் என்னோட சபைக்கு வரலாமே என்றாள், அதற்கு என்ன சொன்ன தெரியுமா, நான் வரவேன், இந்த கண்மூடித்தனத்தில, சிக்கியிப்பதை பார்க்கணும் என்றேன். அன்றைக்கு சபைக்கு சென்றேன் அது ஒரு சினிமா தியேட்டர்ல நடந்தது, வில்லி ∴ப்ரி கம்யூனிட்டி சர்ச், பேசும்படி ஒருவர் எழுந்து நின்றார், அவர் ஷேவ் கூட பண்ணல, ஒரு வாலிபன் பெயர் பில் ஹைபெல்ஸ், அடிப்படை கிறிஸ்தவத்தைக் குறித்து பேசினார், ஜான் அந்த சமயம் கிறிஸ்தவத்தை பற்றி எனக்கு இருந்த தவறான கண்ணோட்டத்திற்கான பதில் கொடுத்தார். அவர் அந்த இடத்தில், பேசினது, இயேசு, அவருடைய சிலுவையை பற்றி, நம்முடைய பாவங்களுக்கான நிவாரண பலி, என்பதை பற்றி பேசினார் அதையெல்லாம் நான் கேட்டேன், வெளிய வரும் போது 2 விஷயத்தை சொல்லிக்கொண்டேன், முதலாவது, நான் இன்னும் நாத்திகன் தான், தேவன் இருக்கிறார் என்பதாக சொல்வதனால் என்னை நம்பச்செய்ய முடியாது, இரண்டாவது ஒருவேளை இது உண்மையாக இருந்தால், என்னுடைய வாழ்க்கைக்கு இதுக்கும் பெரிய சம்பந்தம் இருக்கு.

நா தீர்மானித்தேன், என்ன தெரியுமா, என்னுடைய ஜெர்னலிசம் பயிற்சியையும் சட்டபடிப்பு பயிற்சியையும் உபயோகித்து படிப்படியாக ஆராய்ச்சி செய்யப்போகிறேன், கிறிஸ்தவத்திற்கென்ற நம்பகத் தன்மை இருக்கிறதா அல்லது வேறாதாவது நம்பிக்கை உண்டா, இதற்கு வேற முகங்கள் உள்ளதா, என அறிய நினைத்தேன் அது எப்படி மீளாய்விற்கு நிற்கும், என்னை பற்றி உங்களுக்கு தெரியும் ஜான், ஏன்னென்றால் நான் வாழ்ந்த அசுத்தமான வாழ்க்கை, என்னில் ஒரு பாகம், அது உண்மையாக இருக்ககூடாதென நினைத்தது, அது உண்மையல்ல என நிருபிக்க நினைத்தேன்,

ஏனென்றால் நான் வாழ்ந்த வாழ்க்கை முறைக்கு பொறுப்பேற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை, இன்னொரு பக்கம், ஒரு பத்திரிக்கையாளனா, ஒரு நிமிஷம் பொரு என்றேன், உன் கற்பனைக்கு ஓய்வு கொடு, இந்த வேட்டையில் பந்து விளையாட்டில் நுழையும் வீரனாக போ, அடிக்க புறப்படு அந்த பந்தை அடி அந்த பந்து, தைரியமாயிரு, நாகரிகமாக நட, ஆதாரத்தை அடைய எங்கு செல்லவேண்டியிருந்தாலும் போ, அதனால இந்த தேடுதல் வேட்டைக்கு நா ஆயத்தமானேன், உண்மையா ஜான் நான் நினைத்தேன், விளையாட்டல்ல, இதற்கு ஒரே வாரம்தான் எடுக்கும் என நினைத்தேன். என்னுடைய எண்ணம் 2 நாள் கொடுத்தால் போதும், இதை ஒன்றுமில்லை என காட்டுவேன், இதனுடைய துவகத்தை கண்டறிவேன், ஓட்டைகளை கண்டுபிடிப்பேக், அதற்கு 2 நாள் போதும் என்று தான் நினைத்தேன், சரி, ஆராய துவங்கினேன் செய்துகொண்டிருந்தேன், ஒரு காரியத்தை நிதானிக்க ஆரம்பித்தேன், அதை வைத்து நான், மற்ற மதங்களைப் பார்த்தால், அவையனைத்தும் ஒரு பக்கமாக சரிந்துவிடும், உண்மைய சொன்னா மரண அடிய கண்டுபிடிப்பது கூட சுலபம், அவ்வளவு நம்பிக்கைகள்,

அதில கிறிஸ்தவம் எப்படியென்றால், மற்ற பைகளை குத்தும் பன்சிங் பேக், பன்சிங் பேகை ஒரு முறை உதைத்தால் திரும்பவும் வரும், அது ஒரு விசாரனை மையம் போலிருந்தது, அதாவது நான் ஏதாவது, சவாலிடும்போது, அதற்கு அது சரியான ஆதாரத்துடன் வலிமை நிறைந்த சாட்சியோடு பதிலளித்திடும். அது வல்லமையானது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** எங்கிருந்து துவங்கலாம் என எப்படி தீர்மானித்தீர்கள், கிறிஸ்தவத்தை பற்றிய ஆராய்ச்சி, உங்கள் கவனத்தை கவர்ந்தது எது?

**லீ ஸ்ட்ராபெல்** சரி, பல காரியங்கள் இருக்கிறது என்பது தெரியும், மேசியா என்ற ஒரு கருத்துள்ளது, தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டவைகள் என பலதும் இருக்கிறது ஆனால் இவையனைத்தையும் வடிகட்டி 2 பிரச்சனைகளாக நான் என்னுடைய ஆராய்ச்சிக்கென்ற நியமித்துக்கொண்டேன் ஏனென்றால் முக்கியமான பிரச்சனை என்னவென்றால் இயேசு யார், முதலாவதாக, உண்மையில் அவர் தேவனுடைய குமாரன் என்ற அழைக்கப்படுகிறாரா? பலருடைய கருத்து என்னவென்றால் அப்படியல்ல. ரிச்சர்ட் டாப்கின்ஸ் புத்தகத்தில் “தேவன் ஒரு கற்பனை” தீவிர நாத்திகர் கூறுகிறார், அதாவது இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டதற்கு வெகு சில சரித்திர ஆதாரங்களே உள்ளது என்கிறார், அதைத்தான் நானும் நிதைத்தேன் இரண்டாவதாக, அவர் அப்படி தன்னை தேவனுடைய குமாரன் என்று கூறினால், அதை அவர் மரணத்திலிந்து உயிர்த்தெழுந்து நிருபித்திக்கிறாரா, ஏனென்றால் நான் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறேன் அதாவது சிக்காகோ டிரிபூனில், அங்கு மனநிலை ஆரோக்கியத்தை குறித்த ஆய்வுகளை செய்தோம் உண்மையில் ஜான் அநேக ஜனங்கள் வந்து தைரியமாக உங்கள் கண்களை பார்த்து நான் கடவுள் என்ற சொல்வதற்கு தயங்கமாட்டார்கள், ஏன் அவர்களை நம்பவில்லை என தெரியாது? ஏனென்றால் அங்கு ஒற்றுமை இருக்காது, நிருபிக்க ஆதாரம் இருக்காது, இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லும்போது, அதை கவனிக்கிறோம் அவர் நிருபிக்கவேண்டும், அப்படி அவர் நிருபித்தால், அவர் மரணத்திலிருந்து உயிரோடு எழுந்து அதை நிருபித்தால், அவர் கல்லரையிலிருந்து 3ம் நாள் உயிரோடு எழுந்தார் என்பது நல்ல ஆதாரம், இது உண்மை என்பதற்கு இது போதுமான ஆதாரம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, ஒருமுறை நான் மன நல சுகாதார வசதி மையத்திற்கு சென்றேன் நான் உள்ளே சென்றதும் அங்கிருந்த நபர் என்னிடம், நேராக பார் என்றார், நான் இரண்டாம் தேவ குமாரன் என தெரியுமா என்றதும் தெரியாது என்றேன், எனக்கு தெரியாது உங்களுக்கு எப்படி தெரியும் என்றதற்கு, தேவன் எனக்கு சொன்னார் என்றார், இன்னொரு நபர் அறைக்குள் வந்தபடி சொன்னார், நான் சொல்லவில்லை. இதை கவனமாக கேளுங்கள், அதற்கான ஆதாரங்களை நாம் பார்க்கலாம், இந்த 2 காரியங்கள் இப்போது ஒரு இடைவேளை மறுபடியும் வரும்போது இதனை அறிவுறுத்தும் ஆதாரத்தை நாம் கேட்க இருக்கிறோம், இணைந்திருங்கள், இதை தவறவிடாதிருங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட் , திரும்பவும் வந்திருக்கிறோம் , நாம் லீ ஸ்ட்ராபெலுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், அவர் உறுதியான நாத்திகராக சிக்காகோ டிரிபூனில் 23 வருடங்கள் பணியாற்றியுள்ளார், அவர் சட்ட பதிப்பாசிரியர் ஒருநாள் அவரது மனைவி கிறிஸ்துவை அறிந்துகொண்டார்கள் அது அவரை இந்த நம்பிக்கைகள் உண்மையல்ல என்று நிருபிக்கும்படியான

ஆராய்ச்சியில் நடத்தியது, ஆனால் இப்போது அதனுடைய மீதி கதையை லீ சொல்கிறார் 2 காரியங்களுக்கு பின்னால் நீங்கள் சென்றீர்கள் மறுபடியும் அதை சொல்லுங்கள்.

**லீ ஸ்ட்ராபெல்** முதலாவது இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்றார், இரண்டாவதாக அவர் மரணத்திலிருந்து உயிர்த்தது மூலம் அதனை நிருபித்தாரா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், இதை எப்படி அறிந்துகொண்டீர்கள்?

**லீ ஸ்ட்ராபெல்** வெல் ,முதல்ல நான் என்ன செய்தன்னா, ஜான், நான் நினைத்தது ஓ, நல்ல கதைதான், ஒருவேளை நான் ஆதியிலிருந்து காரணிகளை கண்டறிய வேண்டும், எனவே நான் யோசித்தேன், ஆதியில் இயேசுவுற்கிருந்து சுயசரிதை என்ன? மாற்கு எழுதின சுவிசேஷம், இதுதான் முதன் முதலில் எழுதப்பட்ட கூவிசேஷம் என மக்களால் கருதப்படுவது இது அப்போஸ்தலனான பேதுருவின் சாட்சியை வைத்து எழுதப்பட்டது. எனவே அதை திறந்து பார்த்தேன் நான் கவனித்த முதல் காரியம், இயேசு பொதுவாக எந்த இடத்திலும் தேவனுடைய குமாரன் என்று குறிப்பிடபடவில்லை, அதில் மனுஷ குமாரன் என்றிருந்தது, என் வேலை முடிந்தது என்றிருந்தேன், அவாதம்மை தேவ குமாரன் என்று கூறவில்லை, அவர் தன்னை நான் மனுஷ குமாரன் என்கிறார், உங்களையும் மற்றவர்களையும் போல சாதாரண விஷயம், அப்படிதான் நினைத்தேன் பிறகு ஆழமாக வாசித்தபோது, நான் கண்டறிந்த விஷயம் இயேசு தன்னை மனுஷ குமாரன் என்று கூறும் போது, அவர் மனுக்குலத்தை சார்ந்தவர் என்று கூறுவதோடில்லாமல் அதிலும் மேலான ஒன்றை கூறுகிறார், ஏனென்றால் அவர் என்ன செய்தாரோ அதை தன்னிடமாய் துவங்குகிறார், மனுஷகுமாரன் என்ற பதத்தின் விளக்கம், அது வேதத்தின் எபிரேய வார்த்தைகளில் பழைய ஏற்ப்பாட்டின் தானியேல் 7ம் அதிகாரத்தில் உள்ளது, அதை நீங்கள் வாசித்து பார்த்தால் அதில், மனுஷ குமாரனுக்கு ஒப்பான நமது தெய்வீக தன்மைகளை காணலாம், அவர் எல்லா மனுக்குலத்தையும் நியாயந்தீர்க்க வருகிறார், அவர் சர்வத்துவம் நிறைந்தவர், முழுமையான சர்வத்துவம், வல்லமை, அவர் எல்லாராலும் வணங்கப்படுகிறார் தேவன் மாத்திரமே ஆராதனைக்குரியவர், அவருடைய இராஜ்யம் நித்தியநித்தியமானது, இந்த தன்மைகள் அனைத்தையும் தானியேல் 7ம் அதிகாரத்தில் வாசிக்கலாம், இது தெய்வீகமானது இயேசுவைக் குறிக்கிறது, இவற்றை அவர் தன்னிலே கொண்டிருந்தார், மேலும் நான் மனுஷனைக் காட்டிலும் மேலானவர் என்பதை கூறுகிறார், நான் மனுஷக்குமாரன்,

திடீரென்று நான் யோசித்தேன் ஓ, ஓகே ஒரு நிமிஷம் பொரு, இன்னும் வேறு ஏதாவது இருக்கலாம், அவர் சொன்ன உவமைகளில் எனக்கு மிகுவம் பிடித்தது இது அநேகருக்கு பிடித்தது என நினைக்கிறேன், மாற்கு 6ம் அதிகாரம், இ ங்கு இயேசு தண்ணீரின் மீது நடக்கிறார், எல்லாருக்கும் இந்த சம்பவம் தெரியும் பல மொழிபெயர்ப்புகளில் இருப்பது பயப்படாதே, நான் தான், ஆனால் உண்மையில் அதை ஆழமாக ஆராய்ந்தபோது, இதை நீங்கள் மூலபாஷையான கிரேக்கத்தில் பார்க்கலாம், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மொழி, இயேசு உண்மையில் கூறியது பயப்படாதே, இருக்கிறவராகவே, இருக்கிறேன், இப்படித்தான் தேவன் யாத்திராகமத்தில் எரிகிற முட்செடியில் தன்னை வெளிப்படுத்தினார், அதன் பிறகு அவர் மற்றொரு கூற்றை கூறுகிறார் இதுஇன்னும் தெளிவாக அவருடைய ஜெயத்தை காட்டுகிறது காய்பா பிரதானி ஆசாரியர் முன்பு, தன்னை பற்றி எளிய விதத்தில் கூறக் கேட்கிறார், நீர் கிறிஸ்துவா, ஆசீர்வதிக்கப்பட்டவரின் குமாரனா? இயேசுவினுடைய வாயிலிருந்து வந்து முதல் 2 வார்த்தை, ‘‘நான் தான்’’

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, இதை நிதானமாக கவனிக்கவேண்டும், நீர் கிறிஸ்துவா, அது மேசியாவை குறிக்கும், ஓகே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவரின் குமாரனா, அவர்கள் தேவனென்று சொல்வதில்லை, ஏனென்றால் யூத கலாச்சாரத்தில் தைரியமாக தேவனை அறிக்கையிடுவதில்லை, ஆனால் அதனுடைய அர்த்தம் இதுதான், நீர் தேவனுடைய குமாரனா. இரண்டிற்கும் ஒருபதிலாய் நான் அவர்தான் என்றார், மேலும் அதோடு அவர் இன்னும் வலுவான ஒன்றை கூட்டிச் சொல்கிறார்.

**லீ ஸ்ட்ராபெல்** ஆமா. நிச்சயமா. அவர் சொல்கிறார், மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதையும் நீங்கள் காண்பீர்கள், (மாற்கு 14 62) நான், நியாயந்தீர்க்கும்படி வருவேன், மனுக்குலத்தை நியாயந்தீர்க்கும்படி வருவேன், நினைக்கவே பயங்கரமானது, ஜான், இதைதான் சொல்லியிருப்பாரென நினைக்கிறேன், உண்மையில் அவர் காய்பாவிடம், ஓ, மன்னிக்கவும், நீங்கள்

என்னை பரீட்சிப்பதாக நினைக்கிறீரோ? அதற்கு எதிரானதுதான் உண்மை, அதற்கு காய்பாவின் பிரயுத்திம் என்ன. அங்கு இயேசு, அதாவது தானியேலின் 7ம் அதிகாரத்திற்கு ஆதாரம் இருக்கிறது, அந்த மனுஷகுமாரன் என்னும் பதத்தை தனக்கு அப்பியாசிக்கிறார், எனவே காய்பா அவர் சொன்ன காரியத்தை எப்படி விளங்கிக்கொண்டார், தேவ தூஷம் என்கிறார் எதனால்? ஏனெனில் இயேசு தன்னை தேவன் என்கிறார், அது தெளிவாக தெரிகிறது, தெளிவாக, இயேசுவினுடைய சரிதையை வாசித்தால் அது விளங்கும். இந்த கருத்து எப்படி மறுபடியும் சொல்லப்படுகிறது, யோவான் 10அதிகாரம் வசனம் 30, இயேசு கூறுகிறார், ‘‘நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்’’ ஒன்றாக என்ற வார்த்தைக்க எபிரேய வார்த்தை சாராம்சம் உடையதாக உள்ளது எனவே மக்கள் இயேசு சொன்னதை எப்படி விளங்கிக்கொண்டிருப்பார்கள், அவரைக் கொள்ளும்படி கற்களை எடுத்தார்கள், ஏன்? ஏனென்றால் நீர் ஒரு மனிதனாக இருந்துகொண்டு உம்மை தேவன் என்கிறீரே என்றனர் (யோவான் 10 33) . அவர்கள் அவர் சொன்னதை தெளிவாக புரிந்துகொண்டனர், அதனால் அவரை கொள்ள முயன்றனர், அப்போது நான் யோவானிலிருந்து நகர்ந்துசென்று, ஒரு நிமிஷம் என்றேன். இயேசு மிகத் தெளிவாக தன்னைக் குறித்து, தான் தேவ குமாரன் என்கிறார், அது தெளிவாயிற்கு இப்போதைய கேள்வி, அதை அவர் நிருபித்தாரா? ஏனென்றால் அநேகர், தங்களை தேவனுடைய குமாரர் என்று கூற முடியும். ஆனால் கேள்வி என்னவெனில் அதை நிருபிப்பதற்கு அவரிடம் நம்பத்தக்க காரியம் இருக்கிறதா?

இது மறுக்கமுடியாதது ஜான், இது இயேசுவைக் குறித்து நமக்கு கிடைத்த ஆதாரங்களில் இருக்கிறது, இது ஏதோ பல வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மகான் என்று சொல்லி அவர் மரித்த பின்பு, அவர் தேவன் தான் என்ற எண்ணம் கொண்டதால் சொல்லவில்லை, என்னை பொருத்தவரை அவர் தன்னை மனிதனிலும் சற்று மேலானவராக கூறுகிறார், பல காலங்களுக்கு பிறகு பாரம்பரிய வழக்கமாக இருந்திருக்கலாம் என நினைத்தேன், நாம் ஆதிகாலத்தில் இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட தொகுப்பை நாம் கவனிக்கவேண்டும், இந்த கூடுதலான காரியங்களை அவரே கூறுகிறாரோ, அவர் துன்மார்க்கமான ஆட்களை உவமைகளாக கூறுகிறார், அந்த உவமையின் கருத்து என்னவென்றால் தேவ குமாரனாகிய அவர் அனுப்பட்டார் இறுதியில் அவர் கொல்லப்படுவார் என்பதாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, எனக்கு ஜான் ஏ. டி. ராபின்சன பிடிக்கும், கடவுள் மரித்தார் என்ற இயக்கத்தை துவங்க உதவினவர். சுவிசேஷங்களின் நாட்களை திருத்தியபோது, நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த காரியங்களை மாற்கு சுவிசேஷத்தில் 40ம் நூற்றாண்டில் இணைக்க நினைத்தார். இப்ப என்னால சொல்ல முடியும் அதில் எனக்கு உடன்பாடில்லை , இருந்தாலும் 40களில் எழுதப்பட்டது உண்மை, அது இயேசுவின் உயிர்தெழுதலுக்கு பின் பத்து வருடங்களுக்கு பிறகு தான். 10 ஆண்டுகளுக்கு பிறகு என்றால், மேன், எருசலேமில் செய்திகளின் பட்டியலில் இதுவும் எழுதப்பட்டிருப்பது நிச்சயம். இதிலிருந்து இயேசு தம்மை தேவன் என்று கூறியதற்கான நிலையான ஆதாரம் இருக்கிறது. சரி, இந்த செய்தி உங்களை அடைந்தபோது, அது என்ன தாக்கத்தை உண்டாக்கியது?

**லீ ஸ்ட்ராபெல்** யா, பை த வே, அதைவிட முந்தைய கால ஆதாரங்கள் உள்ளது, நாங்க ஆதி திருச்சபையினருடைய மதக் கொள்கைகளை கண்டறிந்தோம், அவர்களிடம் காணப்பட்ட மனப்போக்கானது இயேசுவே காணக்கூடாத தேவனுடைய முகமாக இருக்கிறார் என்பதை உறுதிசெய்வதாக இருந்தது. மேலும் அவர் தெய்வீகமானவர் என்பதை மறுஉறுதி செய்தது. இப்படிபட்ட நம்பிக்கைகள் மாற்கு எழுதுவதற்கு முன்னதாகவே அவர்களிடம் காணப்பட்டது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** என்னோட கேள்வி, இந்த வெளிபாடு உதயமானபோது உங்களை எப்படி தாக்கியது?

**லீ ஸ்ட்ராபெல்** வெல்,முதல்ல ஆச்சரியமாதா இருந்தது.ஏன்னா மறுபடியும், இன்னும் இதை உறுதிசெய்ய ஓரிரு நாட்கள் ஆகும் அதோடு முடிந்துவிடும் என்று நினைத்தேன். ஆனால் அதிகமா ஆராயந்த போது எனக்குண்டான உணர்வு, ஒரு நிமிஷம் இரு. மனுஷ குமாரன், தமது தெய்வீகதுவத்தை கூறகிறார், அவர் கற்றுக்கொடுத்த உவமைகளை கவனித்தால் அவர் தம்மை விசேஷித்த ஸ்தானத்தில் எல்லா மனுமக்களுக்கும் மேலாக வைத்து பேசுகிறார். அவர் மிக தெளிவாக நாடக நணயத்தில் வல்லமையானதை சொன்னார். தன்னை கேட்கிறவர்கள் விளங்கிக்கொள்ளும் படி பேசுகிறார். அதை நாம், இன்றைக்கும் வாசிக்கும் போது, ‘‘எப்படி, இநத

ஞானம் வந்தது என்போம்.'' ஆனால் அவருடைய காலத்தில் இருந்தவர்களின் பிரதியுத்திரத்தை பாருங்கள், அவரை கொள்ள நினைத்தனர் ஏன்னா அவர் தன்னை தேவன் என்று கூறினார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், இன்னும் 2 நிமிடங்கள் இருக்கிறது, 2வது குறிப்பை பற்றிய காரியங்களை சொல்லுங்கள், மீதமுள்ளதை நாம் அடுத்த வார நிகழ்ச்சியில் தொடர்ந்து பார்க்கலாம்

**லீ ஸ்ட்ராபெல்** யா, நான், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து கவனித்தேன், அவர் மரணத்திலிருந்து உயிர்த்து அதை நிருபித்தாரா. அவற்றை நான் ஐந்து குறிப்புகளாக சுருக்கினேன் 5 நு'ள என்கிறேன், நு என்ற எழுத்தில் துவங்கும் 5 வார்த்தைகள். முதலாவது எக்சிகூஷன், இயேசு மரித்தாரா? மரணம் நிறைவேற்றப்பட்டதா? அவர் சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட போது உண்மையில் மரித்திருந்தாரா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, இன்றைக்கு சிலருடைய கருத்து, ''இல்லை, அவர் கல்லறையில் புத்துணர்வடைந்தார்.'' அவையனைத்தையும் நாம் பார்க்க இருக்கிறோம். தொடர்ந்து பார்ப்போம்.

**லீ ஸ்ட்ராபெல்** ரைட், உண்மை தான், அதற்கு ஆதிகால குறிப்புகள் உள்ளது, அதை மாற்றி சொன்னால், இவை ஒரு மகான்னால் செய்யப்பட முடியாது காரியங்கள். காலியான கல்லறை இருக்கிறது அவருடைய சத்துருக்கள் கூட அது வெறுமையாயிருந்தது என்பதை ஏற்கின்றனர். கண்ணால் பார்த்த சாட்சிகள் உள்ளது, 515 பேர் இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்டிருக்கின்றனர், அதன் பிறகு எருவலேமில் இருந்து சபைகளிலும் இதை விளக்கி சொல்லப்பட்டது, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று பிரசங்கித்த அவருடைய சீஷர்களோடு மற்றவர்ளும் இணைந்தனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நீங்கள் அந்த ஒவ்வொரு குறிப்பையும் படிப்படியாக பார்த்திருக்கிறீர்கள் ,அடுத்த நிகழ்ச்சியில் அதை பார்க்க இருக்கிறோம், இறுதியான முடிவு என்னவாக இருந்தது?

**லீ ஸ்ட்ராபெல்** வெல்,முடிவு இதுதான், அதாவது, அந்த ஆதாரங்கள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் சர் லைனில் லூச்சுக்கூவின் கருத்தை ஏற்கிறேன், அவர் மிகசிறந்த வழக்கறிஞர். 245 கொலை வழக்குகளில் ஆஜராகி வெற்றி பெற்றவர் எதிர்கட்சியாளராகவும் வெற்றி பெற்றிருக்கிறார், இந்த ஆதாரங்களை பார்க்கும் வரையில் அவர் ஒரு நாத்திகர். அவருடைய தன்னுடைய சட்ட திறமைகளை இந்த வரலாற்று ஆதாரங்களில் அப்பியாசித்தார். அவருடைய இறுதியான அறிக்கயில், அவர், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழதலைக் குறித்த ஆதாரங்கள் அனைத்தும் உண்மை என்று தெளிவாக இருப்பதோடு இந்த சத்தியங்கள் அனைத்து எதிர்ப்பார்ப்புகளையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிவிர்த்தி செய்கிறவது என்றார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** மதநம்பிக்கையில்லாத, பட்டதாரிகள் இருக்கிறார்கள். கல்லூரிகளில் பள்ளிகளில் மாணவர்கள் இருக்கிறார்கள்,.பெரியவர்களில் கூட இந்த யோசனையுள்ளவர்கள் உண்டு, நீங்கள் இருக்கும் இடத்திலும் இப்படிபட்டவர்கள் உண்டு, ஓகே, இப்படிபட்ட காரியங்களை அவர்களும் கேட்கிறார்கள். அவர்களையும் நமது அடுத்த வார நிகழ்ச்சியை பார்க்கும்படி சொல்லுங்கள்.

**லீ ஸ்ட்ராபெல்** சரி, முதலாவது, இந்த காரியம் மிகவும் அவசியமானது என நம்புகிறேன். ஏன்னா அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, இயேசு உயிர்த்தெழாவிட்டால் நம்முடைய விசுவாசம் விருதா, நாம் பாவத்திலேயே இருந்திருப்போம் என்கிறார். அதாவது, இந்த பிரச்சனைதான், எல்லாவற்றிலும் முதன்மையானதாக இருக்கிறது. ஏன்னா யார் வேண்டுமானாலும் தங்களை தெய்வீகமானவர் என்றிடலாம், ஆனால் மரணத்திலிருந்து உயிர்த்து அதை நிருபிக்க முடியுமா? எனவே இது மிகவும் முக்கியமான காரியமாக கருதுகிறேன். ஏனென்றால் வரலாற்றிலேயே முக்கியமான நிகழ்வு. மேலும் மக்கள் திறந்த மனதோடு இதை கவனித்து,திறந்த இருதயத்தோடு ஏற்றுக்கொண்டால், வாழ்வில் முன்னிற்கும் எதையும் சமாளித்திடுவர். அவர்களுடைய மனப்பான்மை மாறிவிடும், ''உங்களுக்கு தெரியுமா? ஆதாரம் எனக்கு முன் இருக்கு, தீர்மானம் என்னுடையது என்பார்கள்.'' இந்த மனப்பான்மையோடு, அந்த ஆதாரத்தை நீங்களாகவே நிதானித்து பார்த்தால், சர் லைனல் லுச்சுக்கூ வப்போல ஒரு முடிவு எடுக்கும் நிலைக்கு வருவது நிச்சயம் என நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா. ஆல் ரைட், நீங்கள், தொடர்ந்து பாருங்கள், அடுத்த வாரம் நாம் மிக முக்கியமான விஷயத்தை பார்க்க இருக்கிறோம், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? இந்த நாத்திகர் எப்படி இந்த 5 கருத்துகளை ஏற்றுக்கொண்டு அதை கடந்துவந்தார் என்பதை கேட்க இருக்கிறோம். நீங்கள் நிச்சயம் கேட்க வேண்டிய விஷயம் என்று நினைக்கிறேன், தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.